3rd November 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அரசாங்கம் டாக்ஸி நடத்துவதாக உத்தேசம் இல்லை. நீலகிரி சம்பந்தப்பட்டவரையில், அங்கே மீட்டர் வைத்தால், 'ஒன் வே ட்ராபிக்' என்று ஆகிவிடு வதால், கட்டுபடியாகவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, மீட்டரைவைத்து நிர்ப்பந்தத்தை உண்டாக்கவில்லை. பொது மக்களும், அங்கே உள்ள ஓனர்களும் ட்ரைவர்களும், எல்லோரும் வந்து முறையீடு செய்ததன் பேரில் இவ்வாறு செய்யப்பட்டிருக் கிறது.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: தலைவர் அவர்களே, கட்டண உயர்வு இருக்கும் நிலையில், அதிகம் பேர்கள் டாக்ஸிகளில் ஏறுவ தில்லை என்று தெரிகிறது. இப்பொழுது மூன்றுவது பேருக்கு மேல் அனுமதிக்கவில்லை என்பதால், 'ஆட்டோ ரிக்ஷாக்களை' அதிக மாக்கி, அவை பயன்படும் அளவில் நடவடிக்கை எடுப்பார்களா? என்று அறியவிரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாக ஒரு கேள்வி போட்டால், ஆட்டோ ரிக்ஷா பற்றி விதிகள் என்ன என்று பார்த்து பதில் சொல்லலாம்.

மோட்டார் வாகன சட்டம்

* 358 கேள்வி.—திரு. சி. கோதண்டராம பாகவதர்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போக்குவரத்து அலுவலகங்களில் வேலைப் பளுவை குறைக்கும் வகையில் பஸ்களுக்கும் (Buses) லாரிகளுக்கும் (Public Carriers) விதிக்கப்படும் காலாண்டு வரியையும் (Quarterly Tax) சர்சார்ஜ் (Surcharge)-யும் ஒன்றாக இணைத்து (Clubbing) கஜானாவிலோ அல்லது போக்கு வரத்து அலுவலகங்களிலோ செலுத்தும்வகையில் மோட்டார் வாகன சட்டத்தை திருத்தும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இச் செயற்குறிப்பு பரி சீலனையில் உள்ளது.

Technical teaching staff

* 359 *Q.*—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Non-technical temporary teaching staff in Government Polytechnics are not given increments while the technical temporary teaching staff are given the same;

(*b*) if so, whether there is any proposal to extend the same privilege to the non-technical teaching staff; and

(*c*) the number of teaching staff both technical and non-technical whose services have not been regularised?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The matter is being examined.

(*c*) Technical 85 and Non-Technical 19.

[3rd November 1966

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், பல காலம் பணி செய்தவர்களுக்குச் சிரமங்கள் இருப்பதால், அவர்கள் விஷயத்தில் ஒரு முடிவு இருக்கும்போது, அவர்கள் ஆரம்பத்தில் பணி தொடங்கிய காலத்திலிருந்தே ஊதிய உயர்வைக் கொடுக்க, ரெகுலரைஸேஷன் செய்ய, வழி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது அதைச் சொல்ல முடியாது. பரிசீலனையில் இருக்கும்போது, முடிவைப் பற்றி எப்படிச் சொல்வது ?

புவியியல் ஆராய்ச்சி

* 360 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் பல பகுதிகளிலும், திருச்செந்தூர் தாலூகாவில் குதிரைமொழித்தேரியிலும் அரசாங்கம் பூகர்ப்ப ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : குதிரைமொழித்தேரி பகுதியில் சராசரி 50 அடி முதல் 75 அடி கனத்திற்கு செந்நிற மணல் . . .

Sir, I shall read the answer in English because it contains technical terms.

(*a*) & (*b*) : Yes, Sir. In Kuthiraimozhitheri area, the teri sands occur with an average thickness of 50 to 75 feet and are underlain by Penambarai Sand-stones and limestones. The whole of Kuthiraimozhitheri is in the Reserve Forest. The investigation of these sands in coastal parts of Tirunelveli district has been suggested to the Geological Survey of India for inclusion in the field season programme for 1966–67. The important minerals occurring in other parts of Tirunelveli district are crystalline
9-00 a.m. limestone, coral limestone, Tuffaceous limestone, kankar, ilmenite monozite and garnet sands.

திரு. எம். எஸ். செல்வராஜன் : முழு ஆராய்ச்சியின் முடிவு தெரிந்து அத்தகைய மணலையெல்லாம் பயன்படுத்துகிற காலத்திற்கு மத்தியில் அதில் இருக்கும் வண்ண வண்ணமான மணலையெல்லாம் தற்காலிகமாகத் தொழில்களுக்கு உபயோகப்படுத்துவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்திருக்கிறதா ? அல்லது ஆலோசனை செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதை எப்படி உபயோகப் படுத்த முடியும் என்பது இப்பொழுது தெரியவில்லை. பரிசீலனை செய்த பிறகுதான் பார்க்க வேண்டும்.